REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 18உ சனி (2—7—55) ★ ★ வெளியீடு: ஆனி 19உ ஞாயிறு (3—7—55) [இதழ் 16

வடக்கு-தெற்கு பேச்சு கண்டு அழகேசன் அங்கலாய்ப்பு!

"'வடநாடு—தென்னாடு' என்று சிலர் இப்போது 'கூச்சலிட்டு' வருகிறார்கள்; நான், வடநாட்டில் உள்ள எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தபோது, அங்கு, தென்னாட்டைவிட 'பரம ஏழை'கள் ஏராளமாக இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்தேன்; அங்கு, ஏதோ 'ஒரு சிலரிடம்'தான் பணம் குவிந்திருக்கலாம்; அதை மட்டும் வைத்துக்கொண்டு, 'வடநாடு—தென்னாடு' என்ற வேற்றுமையை உண்டாக்குவது தவறு," என்று, தஞ்சை திலகர் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் திரு. ஓ. வி. அழகேசன் பேசியிருக்கிறார்.

சவுராஷ்டிரத்தில் செயற்கை பட்டு தொழிற்சாலை

'சைபீரியா பாலைவனம்-கோதுமை விளை நிலமாக மாற்றப்பட்டது'

'அதைக் கண்டு நேரு திகைப்பும், பூரிப்பும் கொள்ளுகிறார்!'

'இந்தியா வரும் புல்கானினுக்கு எதைக்காட்டி பண்டிதர் மகிழ்விக்கப்போகிறார்?'

சென்னை பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் கேள்வி

"அகில உலகப் புகழ்பெறுகிறார் நேரு பண்டிதர். அவர் உலகெங்கணும்—சென்றவிடமெல்லாம் புகழப்படுகிறார் என்பதில் நாங்கள் வெறுப்படையவில்லை; அவரது புகழ் கேட்டு நாங்களும் மகிழத்தான் செய்கிறோம். ஆனால் நாம் கேட்பதெல்லாம்—'உலகில் இருக்கிற மற்ற நாடுகளின் பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் உலகம் சுற்றிக்கொண்டா இருக்கிறார்கள்?'—என்பதுதான்.

"நேரு பண்டிதருக்காவது, 'தனக்குச் சொந்தம்' என்று சொல்லிக்கொள்ள இந்தியா மட்டும்தான் உண்டு; ஆனால் பிரிட்டனுக்கோ, உலகில் உள்ள நிலப்பரப்பில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பாகம் காலனி நாடுகளாக அமைந்துள்ளது. 'அகில உலகம் முழுமையிலும் 5-ல் ஒரு பாகம் என்னுடைமை' என வைத்துக் கொண்டிருக்கும் சர்ச்சில் உலகமா சுற்றிக்கொண்டிருக்கிறார்? அவர் உலகம் சுற்றிக்கொண்டிருக்கவில்லை; ஆனால் தமது நாட்டை வளப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறார்.

"அகில உலகையும் விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவிற்கு டாலர் மலை குவித்து வைத்துள்ள ஐசனோவர் உலகம் சுற்றவில்லை; அவருக்கு உலகம் சுற்ற 'நேரம்' இல்லை—தன்னுடைய நாட்டை வளப்படுத்துவதற்கே நேரம் போதவில்லை.

"இப்படிப்பட்டவர்களெல்லாம் உலகம் சுற்றவில்லை—'அதற்கு நேரம் இல்லை; செய்ய வேண்டிய வேறு வேலைகள் ஏராளம்' என்ற காரணத்தால்! ஆனால் நேரு பண்டிதரோ......?

"நேருவின் புகழ் வளருவதல்ல நமக்கு முக்கியம்; அகில உலகிலும் அவரது புகழ் வளர்ந்து வருகிற நேரத்தில், அவரது நாட்டின் புகழும் வளருகிறதா—அகில உலக நாடுகளனைத்தும் அவருக்கு வழங்குகிற அந்தப் புகழ், அவருக்குப் பின்னர் தேபர்ஜிக்கோ, முன்ஷிக்கோ வழங்கப்படுமா என்பதுதான் முக்கியம்.

"அகில உலகப் புகழ்வாய்ந்த பண்டிதரின் சகோதரியார் விஜயலட்சுமி அம்மையார் சோவியத் நாட்டில் இந்தியத் தூதுவராக இருந்த காலத்தில், ஒரு முறைகூட ரஷ்யப் புகழ் வீரன் ஸ்டாலினைப் பார்க்க முடியவில்லையாம்! அந்த அளவுக்கு ஸ்டாலின், தனது நாட்டை வளப்படுத்தும் வேலையில்—நாட்டு மக்களுக்குச் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அதுபோலவேதான் மற்ற ஒவ்வொரு நாட்டின் தலைவர்களும், தங்கள் தங்கள் நாட்டின் வளத்தைக் கட்டிக்காப்பதிலும் கூட்டிவளர்ப்பதிலும் கருத்தைச் செலுத்துகின்றனர்; ஆனால் நேரு பண்டிதரோ, தமது புகழை நிலைநிறுத்த பவனி வருகிறார் அகில உலகிலும்!

"அண்மையில், நேரு பண்டிதர் ரஷ்யா சென்றார்; அங்கே 'கடந்த யுத்தத்தின்போது எங்கள் எதிரிகளால் தூள்தூளாகத் தகர்த்தெறியப்பட்ட எங்கள் இடங்களையெல்லாம் நாங்கள் செப்பனிட்டுத் திருத்திவிட்டோம்; இதோ பாருங்கள்—வெறும் பாலைவனக்காடாகக் காட்சிதந்த சைபீரியாவை—நாங்கள், எங்கள் கடும் உழைப்பால் கோதுமை விளைவிக்கும் வயலாக மாற்றிவிட்டோம்,' என்று காட்டினராம்—ரஷ்ய மக்கள்! தங்கள் இடைவிடா உழைப்பையும் அந்த உழைப்பின் பயனைத் தாங்கள் அனுபவிக்கும் இன்பத்தையும் எடுத்துக்காட்டியபோது, நேரு பண்டிதர், அவற்றைப் பார்வையிட்டுவிட்டு, 'ஓராண்டுக் காலத்திற்குள் இவற்றையெல்லாம் எப்படிச் செய்து முடித்தீர்கள்?' என்று வினவி ஆச்சரியப்பட்டாராம்!

"ரஷ்ய மக்களின் பேராற்றலைப் பார்த்துப் பூரிப்புக்கொண்ட பண்டிதர், ரஷ்யப் பிரதமர் புல்கானினை, இந்தியாவிற்கு வருகைதர அழைத்திருக்கிறார்; தனது நாட்டு மக்களின் இடைவிடா உழைப்பாலும், சலியாத ஆர்வத்தாலும் பாலை நிலத்தைச் சோலை வெளியாகக் காட்டிப் பண்டிதரைப் பூரித்துப் போகச் செய்த புல்கானினை, இந்தியாவிற்கு வரவழைத்து, இங்கு எதைக் காட்டி மகிழச் செய்ய இருக்கிறார் பண்டிதர்? மகாபலிபுரத்திலிருக்கிற கோயிலைக் காட்டுவாரா?—தஞ்சாவூரிலுள்ள ஆலயத்தையும், அங்கே இருக்கும் நந்தியையும் காட்டுவாரா?—அல்லது கபாலீஸ்வரர் கோயிலையும், வெங்கடாசலபதி கோயிலையும் காட்ட இருக்கிறாரா?

"தஞ்சாவூர் கோயிலையும், அதன் அழகையும் இராசஇராச சோழனல்லவா காட்ட வேண்டும்? 'இதோ நான் கட்டி முடித்த கோயில்—2000 ஆண்டுகட்கு முன்பு; அதனுள் அமைந்துள்ள அற்புத ஓவியங்களைப் பாரும்; கோயிலின் அழகைப்பாரும்; இவையெல்லாம் எனது ஆற்றல்' என்று இராசஇராச சோழனல்லவா காட்ட வேண்டும்?

"ரஷ்ய மக்கள், 'சைபீரியாவை வளப்படுத்தி விட்டோம்—தூர்ந்துபோன இடங்களைத் திருத்திப் பண்படுத்திவிட்டோம்; வந்து பாருங்கள்,' என்று அழைக்கிறார்கள்; காங்கிரஸ் நண்பர்கள், இதுவரையிலும்—கடந்த 7 ஆண்டுக் காலமாக எதைச் செய்திருக்கிறார்கள்—'வந்து பார்வையிடுங்கள்'—என்று பிற நாட்டவரை அழைக்க?

"'கடந்த ஏழு ஆண்டுகாலத்தில் உணவு இலாகாவில் எங்களுக்கு ரூ. 45 கோடி நஷ்டம். ரஷ்யப் பிரதமர் புல்கானினே, ஐசனோவரே, சர்ச்சிலே வாருங்கள்; வந்து பாருங்கள் எங்கள் திறமையை! எங்கள் நாட்டையும், அதன் நிலையையும் பாருங்கள்—'ரெடிமேட்' வீடுகட்டினதில் எங்களுக்கு ரூ. 97 கோடி நஷ்டம்; உர பேரத்தில் ரூ. 20 கோடி நஷ்டம்; ஜீப் கார்கள் வாங்கினதில், கம்பளி பேரத்தில் எங்களுக்கு நஷ்டம்; பார்த்தீர்களா எங்கள் திறமையை?' என்று கூறியா அழைப்பார்கள்?

"ஏற்றுமதி, இறக்குமதி வசதிகளைக்கணக்கிட்டால், அகில உலகிலும் நடைபெறுகிற கப்பல் வாணிபத்தில் இந்தியாவின் ஏற்றுமதி—இறக்குமதி வசதி ·5 சதவிகிதம்! அதாவது, '200க்கு—1' என்ற விகிதம்; அதே நேரத்தில் அமெரிக்கா 29 சதவிகித வசதியும், பிரிட்டன் 20 சதவிகித வசதியும் பெற்றிருக்கிறது. இவ்வளவு கீழான நிலையில்—பின் தங்கிக்கிடக்கிற இந்தநாட்டில், தொழிலைவளர்த்த பின்னர் அல்லவா அகில உலகப் புகழைத் தேடவேண்டும்?

(4-ம் பக்கம் பார்க்கவும்)

★

நிகழ்ச்சிகள்

1—7—55 அன்று மாலை 6½-மணியளவில் சென்னை எழுகிணறு பாரக்ஸ் விளையாட்டு அரங்கு—பன்னீர்செல்வம் மைதானத்தில், தோழர் வி. முனுசாமி தலைமையில் பாண்டியன் விளையாட்டு மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பெருந்திரளாகப் பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் இரா. சண்முகம், மற்றும் பல தோழர்கள் கூட்டத் துவக்கத்தில் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், இறுதியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தின் இடையில், அண்ணா அவர்களின் 'கற்பனைக் காட்சி' என்ற ஒரு சிறு உரையாடல் (டேப் ரிகார்டு மூலம்) நடைபெற்றது. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு பாண்டியன் விளையாட்டு மன்றச்

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 6-கோடி மூலதனத்தில் அமைக்க முயற்சி

இத்தாலி நாட்டு முதலும் கூட்டு சேருகிறது

சவுராஷ்டிரத்தில் புதிதாக ஒரு பட்டு—செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது.

சவுராஷ்டிரத் துறைமுக நகரமாக உள்ள விரவால், மேற்படி தொழிற்சாலையை நிறுவுவதற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

பம்பாய் பட்டு—செயற்கைப் பட்டு தொழிற்சாலை சங்கம்தான், மேற்படி முயற்சியை தீவிரமாக மேற்கொண்டு இருக்கிறது.

வீரவால் பகுதியில் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கேற்ற இடவசதியை, பம்பாய் ஆலைச் சங்கம் கோரும் சாதகமான நிபந்தனைக்குட்பட்டு செய்து தருவதாக சவுராஷ்டிர அரசாங்கம் உறுதி கொடுத்திருக்கிறது.

முதலீட்டுக்கு வேண்டிய மூலதனமாக ரூ. 1 கோடி வரை கொடுப்பதாகவும் சவுராஷ்டிர அரசாங்கம் வாக்களித்திருக்கிறது.

இந்தியப் பேரரசின் தொழில் நிர்மாண உதவி நிதி நிலையத்திடமிருந்து ரூ. 2-கோடியைக் கடனாக வாங்க பம்பாய் ஆலைச் சங்கம் திட்டமிட்டிருக்கிறது.

மேற்படி செயற்கை பட்டுத் தொழிற்சாலை, இத்தாலியத் தொழில் நிலையம் ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்து நடத்தப்படும் எனத் தெரியவருகிறது.

அந்த இத்தாலியத் தொழில் நிலையம், மொத்த மூலதனத்தில் சரிபகுதியை—அதாவது, ரூ. 3 கோடியை முதலிடத் தயாராக இருக்கிறது.

பம்பாய், புல்சார், சூரத், பன்வெல் முதலிய இடங்களில் மேற்படி செயற்கைப் பட்டுத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் எனும் கோரிக்கையையும், பம்பாய் ஆலை சங்கம் ஆராய்ந்து பார்க்கத் தீர்மானித்திருக்கிறது.

பன்வெல் பகுதியில் செயற்கை பட்டுத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்குரிய வாய்ப்பும் இருப்பதாக நம்பப்படுகிறது.

'கூட்டுச் சேர்ந்தால் சுதந்திரம் பறிபோகும்'

நடுநிலைமைக் கொள்கைக்கு பர்மியப் பிரதமர் விளக்கம்

வாஷிங்டன், ஜூலை 2—

"எந்த மாபெரும் வல்லரசு இராணுவக் கூட்டிலும் பர்மா சேராது; சேர்ந்தால் பர்மா நீடித்து சுதந்திர நாடாக நிலைத்து நிற்பதற்கு முடியாது."

என்று, பர்மியப் பிரதமர் ஊ-நு, பர்மாவின் நடுநிலைக் கொள்கை பற்றிப் பேசுகையில் பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

"எந்தப் பெரும் வல்லரசுடன் சேர்ந்தாலும் சரி, அது உடனடியாக அந்த நாட்டின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுப்பதாகுமென்று பர்மிய மக்கள் நினைக்கிறார்கள்; எங்கள் சமீப காலச் சரித்திரமும், பெரிய வல்லரசுகளுடன் எங்களுக்குள்ள அனுபவமும் மக்கள் அவ்வாறு கருதச் செய்துவிட்டது,"

என்றும், ஊ-நு உருக்கமுடன் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் 'ஸ்டர்லிங்' மிச்சம்

புதுடில்லி, ஜூன் 30—

இந்த ஆண்டு மே திங்கள் இறுதியில் இந்தியாவின் ஸ்டர்லிங் மிச்சம் ரூ. 712 கோடி என்று இன்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—7—'55 சனி

விடுதலைப் போராட்டம்

இந்தியத் துணைக்கண்டத்து மண்ணில் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியவாதிகள் வைத்துக்கொண்டிருக்கிற பிடியை விட்டுவிட வேண்டும் என்பதற்கு எத்தனை ஆயிரம் நியாய வாதங்களை எடுத்துக்காட்டினாலும், அவர்கள் தளர்த்துவதாகக் காணோம்.

விடுதலை, உரிமை என்ற சொற்றொடர்கள் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் விரிந்த பொருள், போர்ச்சுகீசிய ஆதிபத்திய வாதிகளின் அறிவுக்கு எட்டாதது அல்ல. அந்த சொற்றொடர்களில்தான் தங்களின் மானத்தோடு கூடிய உயரிய நல்வாழ்வு புதைந்து கிடக்கிறது என்பதை—ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் அத்தனை பேரும்கூட அல்ல—விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரேனும் புரிந்துகொண்டுவிட்டால், அந்தப் பகுதி மக்களை எவரேனும் அடிமைகொண்டு ஆதிக்கம் செலுத்திவந்தால், அந்த அடிமைத் தளை — ஆதிக்கக் கோட்டை நிச்சயம் என்றாவது ஒருநாள் அறுத்தெறியப்படும் — தகர்த்தெறியப்படும என்பதையும், போர்ச்சுகீசிய வாதிகள், தங்களைப்போன்ற சகா ஏகாதிபத்தியங்களின் கடந்த கால வரலாற்றிலிருந்தும், நிகழ்கால சம்பவங்களிலிருந்தும் தெரிந்துகொண்டுதானிருக்கின்றனர்.

இன்று உலகத்தில் நாகரீகம் பெருதவர்கள் என்று கருதப்படுகிற—ஆப்பிரிக்க தூந்திரப் பிரதேசத்தில் வாழ்பவர்கள்கூட தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார்கள் என்பதை உலகம் வியப்போடும், ஆதிக்கபுரியினர் அச்சத்தோடும, விடுதலை விரும்பிகள் மகிழ்ச்சியோடும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் — போர்ச்சுகீசிய ஆதிபத்தியவாதிகள் உட்பட!

'எல்லாம் எனக்குத் தெரிந்துதானிருக்கிறது — வந்தது வரட்டும், முடிந்தவரை பார்ப்போம்—நீடித்தவரை இலாபந்தானே! — எங்கள் கொடி அங்கும் பறக்கிறது, என்ற பெருமை எங்களுடையதுதானே'!-என்றபேதமையெண்ணங்கொண்டு, 'கோவாவை விட்டு வெளியேறு' என்ற உரிமைக் குரலை—விடுதலை முழக்கத்தை மதியாததுமட்டுமின்றி, அந்தக் குரல் எழுப்புவோரின் குரல் வளையை நெரித்துவிடவும் முயற்சிக்கிறது — போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம்!

எந்த ஒரு நாட்டு மக்களும் எழுப்பிய உரிமைக் குரலை எந்த ஒரு ஆதிபத்தியமும்—அது எவ்வளவு 'அசுர' பலமுடையதாக இருந்தாலும்—அடக்கி ஒடுக்கி, என்றென்றைக்கும் தன் ஆதிபத்தியத்தை நிலைநாட்டிக் கொண்டதாக உலக வரலாற்றின் எந்த ஒரு மூலையிலும்—ஒரு சிறு குறிப்பும், இன்றுவரை இருப்பதாக நமக்கு யாரும் சொல்லவில்லை.

பெரும் ஏகாதிபத்தியங்கள் எல்லாம் இன்று ஆற்றலிழந்து, தங்கள் தங்கட்கிருக்கும் சிறு சிறு நிலப்பரப்புகளின் ஆதிக்க உரிமையை, அந்த நிலப்பரப்புக்குரிய மக்கள் தட்டிப் பறித்துக் கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக வகைவகையான தந்திரங்களையும், சாகசங்களையும் கையாண்டு வருவதை நாம் கண்டுதான் வருகிறோம்.

ஆனால், வேறு ஏகாதிபத்தியங்களோடு ஒப்பிடும்போது, மிகச் சாதாரண ஆற்றல் மட்டுமே பெற்றுள்ளதென்று கூறப்படுகிற இந்த 'சுண்டைக்காய்' ஏகாதிபத்தியம், கோவாவில் மார்தட்டிப் பார்க்கிறது!

இந்த அடாத போக்கு, போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்திற்கு என்றாவது கிடைத்துத்தான் தீரவேண்டிய ஆதிக்க அழிவை மட்டுமன்றி அவமானத்தையும், உரிமையைப் பறித்து வைத்திருந்தது மட்டுமன்றி, தூங்கியவன் விழித்துக்கொண்டு, 'எங்கே என் வாழ்வு? 'எங்கே என் உரிமை? என்று கேட்டபோது, 'தர மறுத்தவர்கள்—உலக அரசியல் சுற்றிக்கொண்டிருக்கிற உரிமை அச்சினை மதியாதவர்கள்' — என்ற அவமானத்தையும் தேடித்தரப் போகிறது என்பதை இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ளவர்கள் மட்டுமின்றி, உலகத்தோரில் பலரும்தெரிந்துகொண்டிருக்கின்றனரென்பதை நாம் சுட்டிக்காட்டத் தேவையில்லை.

கோவாவிலும், அதைச் சுற்றிலுமுள்ள இந்தியப் பகுதியிலும், இன்று, 'கோவா விடுதலை பெற வேண்டும்—அங்கிருந்து போர்ச்சுகீசியரை வெளியேற்ற வேண்டும்,' எனும் ஆர்வம் மலைவீழ் அருவி எனப் பெருக்கெடுத்துள்ளது; அந்த விடுதலை ஆர்வத்தை அணை போட்டுத் தடுத்திட நினைக்கிறது போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம்!

கடந்த சில வாரங்களில், கோவா விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு எல்லைக்குள் புகும் தொண்டர்களை, போர்ச்சுகீசிய ஆதிபத்தியம் நடத்தும் இழிமுறை, வெறுங்கையும் கொடியுமாகச் செல்லும் தோழர்கள் மீது வெறிகொண்டு அடக்குமுறைகளை ஏவி, தனது இயல்பான 'ஏகாதிபத்தியப் பாணி'யை—மிருகத்தனத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

போலீசாரின் தாக்குதலுக்கு இருவர் பலியாகியிருக்கின்றனர்.

ஒரு இடத்தில் தொண்டர்களைத் தடிகொண்டு தாக்கி வீழ்த்தி, அவர்கள் உணர்வற்ற நிலையில் சாய்ந்திருந்தபோது அவர்கள் மீது ஏறி நின்று இராணுவ 'கவாத்து'ப் பழகினராம், போர்ச்சுகீசிய போலீசார்!

அடித்துத் துவைத்து, மிதித்து நசுக்கி, எலும்புகளை நொறுக்கித் தொண்டர்களை, கோவா எல்லையிலிருந்து இந்தியத் துணைக்கண்ட எல்லையில் தூக்கி எறிகின்றனராம், அவர்கள்!

அவர்களின் ஆதிக்க வெறி புதிய 'உச்சத்தை' எட்டிக்கொண்டிருக்கிறது, நாளுக்கு நாள்.

ஆனாலும், அடக்குமுறை வளர வளர, விடுதலை வேட்கை வெறியாக மாறும் என்பதை போர்ச்சுக்கல் உணர வேண்டும்.

'நிராயுதபாணி'களான தொண்டர்கள் மீது இத்தகு 'பத்தாம் பசலி'த் துறைத்தனம் நடத்துவதை, விடுதலை விரும்பிகளைக் கொண்ட உலகத்தின் பல நாட்டவரும் கண்டிக்கவே செய்வர்.

இந்தியப் பேரரசு இந்த நிலையிலும்கூட, 'அரசாங்க நிலையிலேயே, கோவா அதிகார மாற்றம் நிகழவேண்டும்' என்று விரும்புவதாகத் தெரிகிறது. என்றாலும், மனிதாபிமானம் கொண்ட எவரும் 'விடுதலை கேட்கின்றனர்' என்ற ஒரே காரணத்திற்காக, விடுதலை கேட்பவர் மீது அவர்களது விடுதலையைப் பறித்து வைத்திருப்போர் ஏவும் இக்கொடூர அடக்குமுறைகளைக் கண்டித்தே ஆகவேண்டும்; அந்தக் கண்டனமும் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்திற்குப் புத்தி புகட்டுமா என்பதில் சந்தேகங்கொண்டோர், 'அடுத்த கட்டம் என்ன'—என்ற கேள்வியைக் கேட்க முற்பட்டுள்ளனர்.

200 கம்யூனிஸ்டுகள்

கட்சியிலிருந்து வெளியேறினராம்

இந்தூர் மாவட்டத்தின் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான அரிச்சந்திரா பட்டேல் என்பவரும், அவருடன் மற்றும் 200 பேரும் கட்சியைத் 'துறந்து' காங்கிரசில் சேர்ந்து கொண்டதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் காணப்படுகிறது!

எட்டு விதமான அம்சங்களில் தங்களுக்கும் — கட்சிக்குமிடையே வேறுபாடுகள் இருந்து வருவதாகத் தாங்கள் விடுத்த இராஜினாமாக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனராம்.

நேபாள புரட்சித் தலைவர்

'அபயம்' தர முடிவு ?

நேபாள புரட்சித் தலைவர் டாக்டர் கே. ஐ சிங்கிற்கு அபயம் தர நேபாள சர்க்கார் இணங்கக்கூடும் எனத் தெரிகிறது.

சீனுவில் தஞ்சம் புகுந்துள்ள [illegible]ர் தாயகம் திரும்ப விரும்புவது பற்றி எற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தன.

நேபாள மன்னரை டாக்டர் சிங்கின் ஆதரவாளர்கள் பேட்டி கண்டனர் என்றும், மன்னர் தங்களை ஒரு வாரம் கழித்துத் திரும்பவும் பார்க்கக் கூறியதாகவும் தெரிய வருகிறது.

கோரிக்கைகளைப் பெற நூதன மார்க்கம்!

உள்நாட்டு 'அலவன்ஸ்' கோரிக்கையை நிர்வாகிகள் எற்காவிடின், தாங்கள் எற்கனவே முடிவு செய்துள்ளபடி, மூக கூவரமோ, 'கிராப்'போ செய்துகொள்ளாமல், சுமார் 300 கான்பூர் ரிசர்வ் பாங்கியின் 'டி' பிரிவு ஊழியர்கள், காரியாலயத்திற்கு வருகின்றனராம். ஜூலை 18-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யவும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனராம்!

பம்பாயில், ரஷ்ய சர்க்கார் பிரதிநிதி ஒருவரும், இந்திய ஆலை அதிபர்களும் [illegible]த்தினரும் பேரப் பேச்சு வார்த்தைகள் திருப்திகரமாக முடிவுற்றால், ரஷ்யப பஞ்சு இந்திய ஆலைகளுக்குக் கிடைக்கக் கூடுமாம்!

'விரும்பாவிட்டால் இந்தியைத் திணிக்கக் கூடாது'

ஆனாலும் படிப்படியாகப் புகுத்த வேண்டுமாம்!

லால்பகதூர் சாஸ்திரியின் விநோதப் பேச்சு

ஹுப்ளி, ஜூன் 30—

விரும்பாத எந்த ஒரு மாநிலத்திலும் இந்தியைத் திணிப்பதைத் தாம் எதிர்ப்பதாக இந்திய இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கூறினாராம்.

இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியிருப்பதால், தேசிய மொழியை படிப்படியாகப் பல கட்டங்களாகப் புகுத்தவேண்டும் என்றும், அவர் பெல்காமில் உள்ள லிங்கராஜ் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாணவர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் அவர் இந்தியிலேயே இந்த உபதேசரூப சாகசங்களைப் பேசியிருக்கிறார்.

பெரோஸ்கான் நூனுக்குக் கல்தா!

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நடவடிக்கை

கட்சிக் கட்டுப்பாட்டை மீறினராம்

மாலிக் பெரோஸ்கான் நூன் மற்றும் மூவர், பஞ்சாப் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து, கட்சி ஒழுங்கை மீறியதாகக் கூறி வெளியேற்றப்பட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கை, சட்டசபை முஸ்லிம் லீக் கட்சி நியமித்த உப-குழுவின் சிபாரிசுகளின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

மேலும், சட்டசபைக் கட்சி, அவர்களை இயக்கத்திலிருந்தே அகற்றிவிடுமாறு கட்சித் தலைவரான முகம்மது அலிக்கு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

பெரோஸ்கான் நூன், முஸ்லிம் லீகின் தடையை மீறி, நடைபெற்ற அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

கொள்ளையிட முயன்ற இளைஞனின் பரிதாப முடிவு!

மின்சாரம் பாய்ச்சிய வேலி உயிரை வாங்கியது!

வீட்டுக்காரர் கைது

இரங்கூன், ஜூன் 30—

இங்கு செம்மென்டைன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கன்னம் வைத்துக் கொள்ளையிட ஒரு இளைஞன் முயலும்போது, வீட்டைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த உலோக வேலியில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தால் தாக்குண்டு இறந்துபட்டான் எனத் தெரிகிறது.

உலோகத்தாலான வேலி, வீட்டிலிருந்த மின்சார 'மெயின்'களுடன், கொள்ளையிலிருந்து வீட்டைக் காப்பதற்காக இணைக்கப்பட்டு மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்தது என்பதை சர்க்கார் மின்சார இலாகா அதிகாரி கண்டார் என்று கூறப்படுகிறது.

அதன்பேரில் அந்த வீட்டுச் சொந்தக்காரரை, கொலைக் குற்றம் சாட்டி போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

5,500 மைல் நீள இரயில்-பாதை போடப்படும்!

நாட்டின் போக்குவரத்துத் தேவைகளை சமாளிப்பதற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 5,500 மைல் நீளத்திற்கு புதிய இரயில் பாதைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக இரயில்வே மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோக ஒழுங்கீனங்கள்!

அதிகாரிகள் மீது திரு-கொச்சி சர்க்கார் நடவடிக்கை விரிகிறது

திருவனந்தபுரம், ஜூன் 30—

பூஞ்சார் எனுமிடத்தில் உள்ள சர்க்கார் மருத்துவ மனையைச் சேர்ந்த உதவி மருத்துவர் ஒருவர், மனிதத் தன்மையற்ற போக்கு, பலவந்தமாகப் பணம் பறித்தல் ஆகிய உத்தியோகஒழுங்கீனங்களுக்காக திரு-கொச்சி சர்க்காரால் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மருத்துவ உதவியாளர், ஒரு வேலையாள் ஆகிய இருவரும்கூட அதே காரணங்களுக்காக ஒருமாத காலம் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

★

போலீஸ் அதிகாரி பதவி நீக்கம்

திருச்சூர் மாவட்டம் பாராவூர் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பி. சங்கர பணிக்கர் என்ற ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், தவறான நடத்தைக்காக ஓராண்டு காலம் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டுள்ளார் என்று திரு-கொச்சி சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது.

இப்போது முடியாதாம்!

திருவனந்தபுரம், ஜூன் 30—

"தி. கொ. மாநிலத்தில் பாய்ந்து மேற்குக் கடலில் கலக்கும் நதிகளில் செல்லும் உபரி நீரை சென்னை மாநில உபயோகத்திற்காகத் திருப்பிவிடுவது பற்றி இப்போதும் ஏதும் சொல்வதற்கில்லை" என்று தி. கொ. மாநில மராமத்து மந்திரி கூறியிருக்கிறாராம்.

இந்த நதிகளில் உள்ள உபரி நீரை எந்த அளவு அனுகூலம் தருவதற்கு தி. கொ. மாநிலத்திலேயே உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதுபற்றி விரிவாக ஆராய்வதற்கு முன்னர், அதனை சென்னை மாநில உபயோகத்திற்கு அளிப்பது பற்றி ஏதும் கூறமுடியாது என்றும், இந்த 'ஆராய்ச்சி' நடைபெற்று முடிய குறைந்தது 3 ஆண்டுகளாவது ஆகலாம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பைத்தியம் முற்றி வரும் உலகம்!

"உலகம் நாளுக்கு நாள் பைத்தியம் பிடித்துக்கொண்டே வருகிறது,"

என்று, பாரிஸிலுள்ள 'பிரெஞ்சு மூளை சுகாதார லீக்,' தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறதாம்!

அந்த அறிக்கையில், 200 அமெரிக்கர்களில் ஒருவர் வீதமும், 300-பிரெஞ்சுக்காரர்களில் ஒருவர் வீதமும், 1,000 எகிப்தியர்களில் ஒருவர் வீதமும் பைத்தியக்காரர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது!

நகர வாழ்க்கையில், அங்கு ஏற்படுகின்ற கூச்சலும், சந்தடியுமே இந்தப் பைத்தியம் ஏற்படுவதற்கான காரணம் என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

பருத்தி ஏற்றுமதி வரி குறைகிறது

எல்லாவகைப்பட்ட பருத்தி வகைகளின் ஏற்றுமதி வரியை ரூ 150-லிருந்து ரூ. 125 ஆகக் குறைத்துவிட இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு உபரியாக மேலும் 1,50,000 பேல்களை அனுமதிக்கவும் சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

'மூன்றும் மனிதரின் தலையீடு வேண்டாம்!'

'நாமே தீர்வு காண்போம்'

ஆந்திர முதன் மந்திரி கருத்து

கர்னூல், ஜூன் 30—

"மூன்றும் மனிதர் எவரின் தலையீடு எதுவுமின்றி சென்னை, ஆந்திர மாநிலங்களின் எல்லைத் தகராறுகள் இரு மாநில சர்க்கார்களுக்குமிடையில் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளப்படும்," என்று, ஆந்திர முதன் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

ஆட்குறைப்பு திட்டம்

ஆந்திர சர்க்கார் நடவடிக்கை

கர்னூல், ஜூன் 30—

ஆந்திர சர்க்கார் தங்கள் ஊழியர் தொகையில் 10 சத விகிதம் பேரை வேலையிலிருந்து நீக்கி விடுகிற ஆட்குறைப்புத் திட்டம் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

இதுபற்றி முதன்மந்திரி கோபாலர், எல்லா இலாகா தலைவர்களிடமுமிருந்தும் திட்டங்கள் கோரியிருக்கிறாராம்.

இந்தத் திட்டம் தற்காலிகமானது—மாற்றலுக்குரியது என்றும், எந்த அளவு ஆட்குறைப்பு செய்வது, அதனால் சர்க்காருக்கு எவ்வளவு இலாபம் என்பதைப்பற்றி இனிதான் கணக்கிட வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

பதப்படுத்தப்பட்ட பால் வினியோகம்

சென்னை, ஜூலை 1—

இன்று முதல் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள சர்க்கார் பால் உற்பத்திச்சாலையில் 'பதப்படுத்தப்பட்ட' பால் உற்பத்தி செய்யப்படுமெனவும், இந்தப் பால், படி ரூ. 1 வீதம் விற்கப்படும் என்றும், உற்பத்தி செய்யப்படுகிற பதப்படுத்தப்பட்ட பாலை, துணை வினியோகிகள் மூலம் சென்னை சர்க்காரே நேரிடையாக வினியோகம் செய்யுமென்றும் கூறப்படுகிறது.

சூரிய அடுப்பில் சீர்திருத்தம்

எளியவர்களும் உபயோகிக்கும் அளவுக்கு முயற்சி?

விறகில்லாமல் வெய்யிலால் சமைக்கும் வெய்யில் அடுப்பை எளிய முறையில் செம்மையாக அமைப்பதற்கும், அதற்குப் பயன்படும் அலுமினியப் பிரதிபலிப்புக் கருவிகளுக்குப் பதிலாகத் தட்டையான கண்ணாடிகளையே உபயோகிக்கவும் முயற்சி செய்யப்படுகிறது.

இம்முறைப்படி, சூடேற்ற வேண்டிய பாத்திரம் கருப்பு வர்ணம் பூசப்பெற்றிருக்கும்; வெய்யில் அடுப்பில் பல கண்ணாடிகள் பற்பல கோணங்களில் நிலையாக இருக்கும்; சூரிய ஒளியை அக்கண்ணாடிகள் பிரதிபலித்து, அப்பாத்திரத்தின் அடியில் விழச் செய்யும்.

கண்ணாடிகளின் மொத்தப் பரப்பளவு பத்து சதுர அடியானால், மூடியமைந்த பாத்திரத்தில் ஒரு குவார்ட் தண்ணீரைப் பத்து நிமிடத்தில் கொதிக்க வைத்துவிடலாம். சூரிய ஒளியைப் பிரதிபலிப்பதற்கு அலுமினியத்துக்குப் பதிலாகக் கண்ணாடியைப் பயன்படுத்த முயற்சிப்பதற்குக் காரணம் கண்ணாடிகள் விலை மலிவாக இருப்பதாலும், சாதாரண விவசாயியும் அலுமினியத்தைக் காட்டிலும் இவற்றை எளிதாகக் கையாளலாம் என்பதாலும்தான்!

ரூ 3 - லட்சம் செலவில், 150 - படுக்கைகள் உள்ள ஒரு க்ஷயரோக நிலையத்தை கோலாருக்கு அருகில் நிறுவ, மைசூர் சர்க்கார் உத்தேசித்துள்ளனராம்.

செஞ்சீனாவின் தொழிற் கொள்கை

மணிலா, ஜூன் 27—

மக்கள் சீனாவின் தொழில் கொள்கை சீன அரசாங்கத்துக்கு மிகவும் இலாபகரமானதாக விளங்குகிறது. என்று பத்திரிகை ஒன்று கூறுகிறது.

மக்கள்சீனாவின் 25 மாநிலங்களுள் ஒன்றில் மாத்திரம் சென்ற நான்கு ஆண்டுகளில் தொழிலாளருக்காகச் செய்யப்பட்ட செலவுகளும் மற்றும் செலவுகளும் நீங்கலாக $4\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைத்திருக்கிறதாம்.

மாநிலம் முழுவதும் உள்ள வேலை முகாம்களில் செங்கல் செய்தல், கல் உடைத்தல், கைத்தொழில், விவசாயம் முதலியவை நடைபெறுவதாக அப்பத்திரிகை கூறுகிறது. அங்கு வேலை செய்வோரே ஆறுகளை மறித்து அவற்றின் நடுவே அணைகள் கட்டுகிறார்களாம்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால்!

கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்ததற்காக, 'போட்டிக் குழு'வைச் சேர்ந்த ஐவரை. உத்தர பிரதேச மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் 'அட்ஹாக் கமிட்டி' ஓராண்டு காலத்திற்கு 'விலக்கி' வைத்திருக்கிறது.

உருக்கு இரும்பு விலை அதிகரிப்பு

புதுடில்லி, ஜூலை 1—

இன்று முதல் உருக்கு இரும்பின் விலை ஒரு டன்னுக்கு ரூ - 20-க்கு மேல் சிறிது அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது ரூ. 400 ஆக ஒரு டன் உருக்கு இரும்பின் விலை இருந்து வருகிறது. தெரிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பின்படி, ஒரு டன் உருக்கிரும்பின் விலை ரூ. - 420-க்கும் சற்று அதிகமாகவே தான் இனிமேல் இருக்குமாம்

ஆனால் விவசாயிகள் உபயோகிக்கும் இரும்பு, டன் ஒன்றுக்கு ரூ 5 வீதம்தான் உயருமென்றும், இந்த விலையேற்றத்தினால் ஈடுகட்டும் நிதியின் தொகையும் ரூ. 4-கோடிக்குமேல் ஆகிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இந்தியா 6 லட்சம் டன் உருக்கிரும்பு இறக்குமதி செய்யும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தற்போது உலகச் சந்தையில் இரும்பிற்கு ஏற்பட்டுள்ள சிறிது விலையேற்றமும், உள்நாட்டிலும் இரும்புப் பொருட்கள் உபயோகம் அதிகரித்திருப்பதுமே இந்த விலையேற்றத்திற்கான காரணம் என்று தெரிகிறது.

சேலம் கிளை இரயில்வே தொழிலாளர் சங்கம்

26—6—55 மாலை பி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கிளையின் வளர்ச்சிக்கு ஆவன செய்வது என்று நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உறுதி மேற்கொண்டபின்னர், இரு அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரயில்வே தொழிலாளர் 'கோரிக்கை தினம்'

தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கம் (செங்கல்பட்டு கிளை), தென்பகுதி தொழிலாளர் சங்கம் (செங்கல்பட்டு கிளை) ஆகிய கிளைகளின் சார்பில், ஜூன் 27-ந் தேதி 'கோரிக்கை தின'மாகக் கொண்டாடப்பட்டது..

27—6—55 மாலை, செங்கல்பட்டு தர்க்கா மைதானத்தில், தோழர் ஆர். சுயம்புநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் முருகேசன், வியோஜோசப், ராஜரத்தினம் ஆகியோர் இரயில்வே தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து பேசினர்.

செய்திச் சுருள்

★

முத்துகிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றம்

18—6—55 இரவு 8 மணியளவில், கடையநல்லூர், முத்துகிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்ற முதல் ஆண்டு விழா தோழர் ப. புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆ. திராவிடமணி விழாவைத் துவக்கி வைத்தார். தோழர் சி. நடராசன் ஆண்டு அறிக்கை படித்தபின்னர், தோழர் ஈ வெ. கி. சம்பத் 'மறுமலர்ச்சி' குறித்துப் பேசினார்.

* * *

25—6—55 இரவு 9 மணியளவில் மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் த. மு. சுல்தான் தலைமையில் நடைபெற்றபோது, மன்றச் செயற்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நன்றி அறிவிப்பு

12—6—55-ல் கடலூர் ஓ. டி. 2-வது வட்ட தி. மு. கழக திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த தோழர்கள் என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ., இரா. சாம்பசிவம், முத்தரங்கம் ஆகியவர்களுக்கும், 1, 2-வது வட்ட நிர்வாகிகளுக்கும், ஒத்துழைப்புத் தந்த பொதுமக்களுக்கும், திறப்பு விழாவிற்குப் பொருளுதவி செய்த பெரியோர்களுக்கும்—தோழர்களுக்கும் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதாக கடலூர் 2-வது வட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர் தோழர் எஸ். அஜீஸ் தெரிவித்துக்கொள்கிறார்.

பாராட்டு விழா

20—6—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, பம்பாய் — தாராவி சௌந்தர பாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில், தோழர்கள் எஸ். தியாகராசன், த மு. பொற்கோ ஆகியோருக்கு அன்பகத்தில், தோழர் சா. தர்மராசன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. தோழர்கள் புத்தரசு, பி. எஸ். செல்லையா, வி. தேவதாசன், வடவைக்குயில், செண்பகபாண்டியன், வளர்மதி ஆகியோர் தோழர்கள் இருவரையும் பாராட்டிப் பேசினர். வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துத் தோழர்கள் தியாகராசன், பொற்கோ ஆகிய இருவரும் பேசிய பின், தேநீர் விருந்தும் நடைபெற்றது.

நாமக்கல் தாலுகா ஆரம்ப ஆசிரியர் சங்கம்

26—6—55 மாலை 3 மணிக்கு கோட்டை, ஆரம்பப் பாடசாலையில் திரு. டி. என். முருகேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில், சங்க வரவு-செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், திரு. எம். முத்துச்சாமியைத் தலைவராகக் கொண்ட புதிய சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், சைக்கிள் ஜாதாவில் கிடைத்த நூலை ஏலம் விட்டதில் கிடைத்த பணத்தை சங்க நிதியில் சேர்த்துக்கொள்ளவும், நாட்டாண்மைக் கழகங்கள், உதவி பெறும் தனிப்பட்ட நிர்வாகங்கள், மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, மத்திய ஊதியக் குழுவின் திட்டப்படி ஒரேவித அடிப்படை ஊதியமும், ஊதிய உயர்வும் கிடைக்க ஆவன செய்ய சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், ஒரே ஆசிரியரைக் கொண்ட துவக்கப் பள்ளிகளில் உதவி ஆசிரியர்களை நியமிக்கும்படி மாவட்டக் குழுவை கேட்டுக்கொண்டும், மாவட்ட யூனியன் பைலாவின் அடிப்படையில் தாலுகா யூனியன் பைலாவை மாற்றி அமைக்கவேண்டுமென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கும்மிடிபூண்டி தி. மு. க. சொற்பயிற்சி மன்றம்

26—6—55 மாலை 5 மணியளவில், தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமையில் தோழர்கள் ஏ. இராதாமணாளன், ஏ. சு. மணி, ப. செ. தூயமணி, கலைமணி ஆகியோர் 'தனி அரசு' எனும் பொருள் குறித்துப் பேசினர்.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

24—6—55 இரவு 7 மணிக்கு, சென்னை—வண்ணை மேற்படி படிப்பகத்தில் தோழர் பி. நாகப்பன் தலைமையில் நடைபெற்ற படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி சௌந்திர பாண்டியன் கழகம்

19—6—55ல் மேற்படி கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எம். எஸ். பால் அவர்களை செயலாளராகக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. சென்ற ஆண்டு வரவு - செலவு கணக்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பெயர் சூட்டல்

13-6-55ல், சாத்தான்குளம் நகர தி.மு.க. உறுப்பினதோழர் பொ. ஞானமுத்து அவர்களின் பெண் மகவுக்கு "பூங்கோதை" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

'தினத் தந்தி'யின் சின்ன புத்தி!

ஒரு மறுப்பு

★

பெங்களூர், தோழர் மு. கோ. வேந்தன் எழுதுவதாவது:—

இத்திங்கள் 26-ந் தேதி, பெங்களூர் ராஜாஜி நகரில், கழகத் தோழர் சு. கண்ணன் திருமணத்தில், பெரியார் கன்னடர்களை மறந்து தமிழர்களுக்குச் சேவை செய்கிறாரென்றும், மறுபடியும் திரும்பி வந்து கன்னடர்கள் முன்னேற்றத்திற்காகப்பாடுபடவேண்டுமென்றும் நான் பேசியதாகத் 'தினத் தந்தி' 28—6—55 இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நான் பேசியது இது:—

"பெரியார் ஓர் கன்னடக்காரர்; அவர் தமிழ் நாட்டில் பிரசாரம் செய்து இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்களுக்குத் தமிழ் மக்களை இழுத்து வந்தார். இன்று பெரும்பாலும்தமிழர்கள் தான் இதுபோன்ற சீருதிருத்தத் திருமணங்கள் செய்து கொள்கிறார்கள். தமிழருக்குக் கற்பித்தவர் நம் கன்னட மொழியைச் சேர்ந்தவராவார். இதுபோன்ற திருமணங்கள் நம் கன்னடத்தோழர்கள் அதிகமாக செய்துகொள்கிறார்களா? கிடையாது. இதை நினைக்கும் போது, உண்மையிலேயே வருத்தமேற்படுகிறது. எனவே, கன்னடத் தோழர்களே, நம் மொழியைச் சேர்ந்த பெரியாரைத் திரும்பிப் பாருங்கள்! பெரியார் கற்பித்ததை தமிழ் மொழியைச் சேர்ந்த அண்ணா நடத்தி வருகிறார். அப்படியிருக்க ஏன், இதுபோன்ற திருமணங்களை செய்துகொள்ளக் கூடாது? இனியாவது நன்றாக சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

மேலே குறிப்பிட்டுள்ளவைதான், நான் பேசினவை. அதைத்தான் 'தினத் தந்தி' இதழ் திருத்தி எழுதியிருக்கிறது.

திருமணங்கள்

27—6—55ல், திண்டுக்கல் தோழர் ஜெப்போலியன்—தோழியர் அமராவதி திருமணம் திரு. என். இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குழந்தை, எல். வீரராசன், வெ. மாணிக்கம் ஆகியோர் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

26—6—55 காலை 10 மணிக்கு, கருகமாணிக்கத்தில், கரூர் தோழர் கே. ஏ. முருகேசன் — தோழியர் பட்டம்மாள் திருமணம் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, டி. கே. தங்கவேல் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

26—6—55 இரவு 7 மணிக்கு, திருச்சி வாகனேரியில், தோழர் மா. தர்மலிங்கம்—தோழியர் அ. அஞ்சலை அம்மையார் திருமணம், தோழர் எஸ். செமொறன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிற்றரசி-சுப்பிரமணியம், ஏ. பி. தர்மலிங்கம், டி. கே. திராவிடமணி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இரவு 9 மணியளவில் தோழியர் சுலோசனா குழுவினர் இன்னிசை நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

* * *

26-6-55 காலை $9\frac{1}{2}$ மணியளவில், கந்தியம்பாக்கம் தோழர் பி. துரைவேல்—தோழியர் எம். வள்ளி அம்மையார் திருமணம், தோழர் கே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. கிருஷ்ணன், ஏ. இராதாமணாளன், எஸ். ஏ. சேரலாதன், மு. குணசீலன், ஜே. எஸ். வாசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

* * *

26—6—55ல், திருச்சி தாத்தையங்கார்பேட்டை தோழர் பெருமாள்-தோழியர் வெள்ளையம்மாள் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

* * *

வடாற்காடு மாவட்டம் வேலூர் தோழர் துரைசாமி—தோழியர் தேவகி அம்மாள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

30—6—55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, உடுமலை தாசு சந்தில், தோழர் எம். பொன்னுசாமி தலைமையில் தோழர் முத்துச்சாமி—தோழியர் சின்னம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் ப. நாராயணன், இரா. தங்கவேலு, பெ. குருவன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

திருமண நன்றி அறிவிப்பு

விருதுநகர், ஜூன் 30—

"26—6—55-ல் நடைபெற்ற எங்கள் திருமண விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தரையும், பரிசுகளும் வழங்கிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்," என்று, தோழர் கே. சுப்பிரமணியன்—தோழியர் எஸ். பாலம்மாள் அறிவிக்கின்றனர்.

இத்திருமண நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

(அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.)

பொதுச்செயலாளர் உரிமை முழக்கம்

இதைத்தானே நாமும் கேட்கிறோம்? இதை நாம் ஏன் கேட்கிறோம் என்றால் நமக்கு அந்த உரிமை இருக்கிறது—நாம் செலுத்தும் வரியினால்."

—இவ்வாறு, 1—7—55 அன்று மாலை 6½ மணியளவில், சென்னை எழும்பூர் பாரக்ஸ் விளையாட்டு அரங்கில், தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெற்ற பாண்டியன் விளையாட்டு மன்ற ஆண்டு விழாவில் சொற்பொழிவாற்றிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்:—

"அண்மையில் பாண்டுங்கில் ஆசிய—ஐரோப்பிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில், 28 நாடுகள் கலந்துகொண்டன. அந்த 28 நாடுகளிலும் 3 நாடுகள் நீங்கலாக உள்ள மற்ற 25 நாடுகளும், நாம் கோரும் திராவிட நாட்டைவிட — நமது சொந்த நாடான திராவிடத்தைவிட நிலப்பரப்பில் சின்னவை; அவற்றுள் ஒன்றுதான் லெபனான் நாடு; அந்த லெபனான் நாட்டின் மொத்த மக்கள் தொகையே 12½ லட்சம் பேர்தான்; ஆனால் நமது திராவிடத்திலுள்ள ஒரு நகரான இந்தச் சென்னையின் மக்கள் தொகையோ 15 லட்சம்! நாம் 2½ கோடி பேர் தமிழ் மக்கள்—7¾ கோடி பேர் திராவிடர்கள்!

"அவ்வளவு பெரிய—உலக முக்கியத்துவம் பெற்ற மாநாட்டிலே நேருவுக்குச் சமமாக நின்று தலைநிமிர்ந்து பேசும் நிலை அந்தச் சிறிய நாடான—சென்னை நகரைக் காட்டிலும் சிறிய பகுதியான அந்த நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது!

"யூகோஸ்லேவியா!—45 லட்சம் மக்களைக்கொண்ட சிறிய ஒரு நாடு; அதன் தலைவர் மார்ஷல் டிட்டோ! அந்த டிட்டோ இந்தியா வந்தபோது அவருக்கு இங்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளுக்கு ஒரு அளவுண்டா? சென்னை ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் அவர் சென்னை துறைமுகத்தை அடைந்ததும், மாநாட்டைவிட்டு விட்டு அவரை எதிர்கொண்டழைக்க ஓடோடியிருக்கிறார் சென்னை மாநில கவர்னர் பிரகாசா! இவ்வளவு பெருமைக்குரியவராகப் புகழப்படும் அவரது நாட்டிலே, கடற்கரையே கிடையாது. ஆனால், நமது திராவிடத்தின் கடற்கரை நீளமோ 1,700 மைல்! கடற்கரை வளமற்ற நாடாக—சிறிய நாடாக யூகோ இருந்தாலும், அதன் தலைவர் டிட்டோவுக்குக் கிடைத்த வரவேற்பிற்கெல்லாம் காரணம், யூகோ—ஒரு தனி நாடு என்பதால்தானே?

"கடந்த 12 ஆண்டு காலமாக தமிழ் நாட்டுக் காங்கிரசின் ஏகபோகச் சக்ரவர்த்தியாகவும், எவராலும் அசைக்கப்பட முடியாதவராகவும், இப்போது சென்னை மாநில முதலமைச்சராகவும் வீற்றிருக்கும் தமிழ் நாட்டுத் தலைவர்களில் சிறந்த காமராசர், வடநாடு சென்றால், அவருக்கு அங்குள்ள ஒரு சிறு பஞ்சாயத்துப் போர்டாவது வரவேற்புக் கொடுத்ததுண்டா?

"45 லட்சம் மக்களை மட்டுமே கொண்ட அந்தச் சின்னஞ் சிறு நாட்டுத் தலைவர் டிட்டோவுக்குச் சென்றவிடமெல்லாம் வாழ்த்து; 2½ கோடி தமிழ் மக்களின் பெருமை மிக்கத் தலைவருக்கோ, வடநாட்டில் ஒரு சிறிதளவு மதிப்புகூடக் கிடையாது. வடநாட்டிலிருந்து வருகிற எந்தத் தலைவரானாலும் அவருக்கு இங்கு வரவேற்பும் — வாழ்த்தும் அளிக்கப்படுகிறபோது, இங்குள்ள பெருந் தலைவர்கள்—முதல் மந்திரி காமராசர் — ஏன்?—ஆச்சாரியார்கூட அங்குச் சென்றால் வடநாட்டவரால் ஏறெடுத்தும் பார்க்கப்படாமல் இருக்கும் காரணம் என்ன? இதைத்தான் அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் நன்றாகச் சிந்திக்கவேண்டும்."

இவ்வாறு பேசிய பொதுச்செயலாளர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"நாம், பரந்த ஒரு நிலப்பரப்பை—நமது சொந்த நாட்டை மீட்கப் பாடுபடுகிறோம்; அந்த நாட்டின்மீது வீசப்பட்டுள்ள ஆதிபத்திய வலைகளை அறுத்தெறிவதற்கான கருத்துக்களைப் பரப்புகிறோம்; காரண காரியங்களைக் காட்டி மக்களிடையே நமது கொள்கைகளைப் பரப்புகிறோம்—பரப்ப முயற்சிக்கிறோம். இந்த நமது முயற்சி, மனிதப் பண்புக்கு அப்பாற்பட்டதல்ல; நாம் ஆண்ட நாட்டை நாமே மீண்டும் பெற வேண்டுமெனறுதான் முயற்சிக்கிறோம்; ஆனால், நாம் அந்த முயற்சியில் ஈடுபடும்போது பிறரின் கேலி மொழிக்கும், கிண்டலுக்கும் ஆளாக்கப்படுகிறோம்; நமது போராட்டங்களெல்லாம் 'வெறும் பகற் கனவு'கள் என்று இகழப்படுகின்றன. பிறரால் இகழப்படுகிற அதே நேரத்திலும் நாம் வளர்ந்துகொண்டுதான் வருகிறோம்.

"நம்மைப் பற்றி அறிந்துகொண்டவர்கள் மிகச் சிலர்; ஆனால் நம்மைப்பற்றி இன்னும் அறிந்துகொள்ளாதவர்களோ மிகப் பலர்!

"நாம் கூறுகிற கருத்துக்களைக் கேட்டு அவற்றை ஏற்றுக் கொண்டவர்கள் மிகச் சொற்பப் பேர்தான்; ஆனால், இன்னும் நாம் கூறும் கருத்துக்களுக்குச் செவிமடுக்க மறுக்கும் மக்கள் தொகையோ ஏராளம்—ஏராளம்!

"அப்படிப்பட்ட நிலையிலும் தான், கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக உருவாகி வளர்ந்து வந்திருக்கிற காங்கிரஸ் – காந்தியார் நிதிக்குக் கோடி கோடியாக ரூபாய் திரட்டிய காங்கிரஸ் – ஆண்டொன்றுக்கு 450 கோடி ரூபாய் வரைக்கும் வரவு-செலவு வைத்துக் கொள்கிற காங்கிரஸ் – 200-க்கு மேற்பட்ட தினசரிகளையும், 600-க்கு மேற்பட்ட வாரப் பத்திரிகைகளையும், 400-க்கு மேலாக மாத இதழ்களையும் கொண்ட காங்கிரஸ்-போலீஸ் துறையையும், இராணுவத் துறையையும் தன் கையில் வைத்துக்கொண்டு நாட்டையாளும் காங்கிரஸ் - சர்க்கார் சொத்துக்களைத் தன் சொத்தாகப் பாவித்துக் கொள்கிற காங்கிரஸ்-பொது மக்களிடமிருந்தும ஏழைகளிடமிருந்தும் பிடுங்கி 'தியாகி' நிலம் வழங்கும் காங்கிரஸ் – நம்மோடு போட்டி போடுகிறது!

"நமக்கோ பத்திரிகைப் பலம் கூடக் கிடையாது! இருக்கிற 'நம் நாடு' பத்திரிகையோ, மிகச் சிறியது! அந்த அளவுக்குக் காங்கிரசைவிட எவ்வளவோ குறைந்த பலம் உள்ளவர்களாகிய நாம் நடத்தும் பொதுக்கூட்டம் என்றால், அங்கே கடல்வெள்ளம்போல் மக்கள் கூட்டம் திரளுகிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்ன?"

மேலும் தொடர்ந்து பொதுச் செயலாளர் அவர்கள் பேசுகையில், அரசியலை, ஒரு விளையாட்டு இடத்திற்கு ஒப்பிட்டு, அங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் பங்குபெறும் ஆட்டக்காரர்களின் ஒவ்வொரு பிரிவினரிலும், முன் நிற்போர், பின் நிற்போர், 'கோல் கீப்பர்' எனும் பலவித பிரிவுகளாகப் பிரிந்து எதிரிகளின் தாக்குதலைத் தடுக்க முயற்சிப்பதுபோல்; தாம், கழகமாகிய அரசியல் விளையாட்டின் 'கோல்கீப்ப'ரென்றும், தம்மீதும், கழகத்தின் மீதும் எதிரிகள் வீசும் கவண்கற்களைத் தடுத்தும், வசைமாரிகளைத் தாக்கியும், தங்கள் இலட்சியத்திற்காக முழுமூச்சுடன் போராடுபவர்கள் கழகத் தோழர்கள் என்றும் குறிப்பிட்டார்.

"விளையாட்டுகளில் பலமுறை-மாறி மாறி வெற்றி தோல்வி ஏற்படுவது சாதாரணம்; இவ்வாறு பலமுறை வெற்றி தோல்வியைக் காணுகின்ற ஆட்டக்காரர்கள், அந்த வெற்றி தோல்விகளைப்பொருட்படுத்தாமல், தங்கள் இலட்சியத்திலேயே இரண்டறக் கலந்துவிடுகிறார்கள்; அதுபோலத்தான், தங்கள் கருத்துக்களை நாட்டில் பரவச் செய்வதில்—தங்கள் கொள்கைகளுக்கு நல்லாதரவு கிடைக்கச் செய்வதில்—தங்கள் இலட்சியத்திற்கு வெற்றி கிடைக்கச்செய்வதில் வெற்றி அடைந்தாலும் — தோல்வியுற்றாலும், தங்கள் இலட்சியத்திலேயே இரண்டறக் கலந்துவிடவேண்டிய பண்பு அரசியலிலும் உண்டாகவேண்டும்," என்றும் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிகள் — தொடர்ச்சி

சார்பில் வரவேற்பிதழும், சென்னை 9-வது வட்ட தி. மு. கழகம். சென்னை துறைமுகத் தொழிலாளர்கள், சென்னை 9-வது வட்ட நண்பர் குழாம் ஆகியோர் சார்பில் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

* * *

அன்று பகல் 12 மணியளவில் சென்னை, போர்ச்சுகீசுத் தெரு, 5-வது எண்ணுள்ள இல்லத்தில், சென்னை 9-வது வட்டம் (ஏழுகிணறு) தி. மு கழகச் சார்பில பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணா ஆகியோருக்குச் சிறந்த விருந்தளிக்கப்பட்டது. விருந்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணா, மற்றும் தோழர்கள் கே. ஏ மதியழகன், அ. பொன்னம்பலனார், நெடுமாறன், என். வி நடராசன், முல்லை-சத்தி, எஸ். எஸ். பிலிங்கம், சி. ஆர். பாலசுந்தரம், காஞ்சி-இராசகோபால், டபிள்யூ கே தேவராசன், சி. எஸ். ராம், காஞ்சி-கல்யாணசுந்தரம், முத்து, தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், மற்றும் வட்ட முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

★★★★★★★★★★★★★★★★★★

நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழு

★

"10-7-55 காலை 10 மணிக்கு, குற்றாலத்தில், நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழு கூடுகிறது;

"இக்கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி, நெல்லை மாவட்டத்தில் அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சி, எதிர்கால ஆக்க வேலை, மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் முக்கிய தகவல்கள், திட்டங்கள் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்; எனவே, குழு உறுப்பினர்கள் தவறாது வர வேண்டுகிறேன்; அத்துடன், ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும் இக்கூட்டத்தில் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்;

"கூட்டத்திற்கான ஏற்பாடுகளையும், உணவு—படமெடுத்தல் போன்றவைகளையும், தென்காசி தி. மு. கழகமும், மாவட்ட உறுப்பினர் தோழர் குருசாமி அவர்களும் தக்க முறையில் ஏற்பாடு செய்து வருகிறார்கள்,"

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கோவா இணைப்புப் பொதுக் கூட்டம்

★

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் 3–7–1955 மாலை 6-30 மணிக்கு

★

தலைவர்: **கே. இரகுராமையா எம். பி.**

சொற்பொழிவாளர்கள்: மக்கள் சபை உறுப்பினர்களான டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, டாக்டர் லங்காசுந்தரம், ஏ. கே. கோபாலன், நிஜலிங்கப்பா, திரிதிப் குமார் சௌத்ரி, பி. நடேசன், மற்றும் எம். கல்யாணசுந்தரம் எம். எல். ஏ., முதலானோர்

(வி-ம்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கோவையில் பொதுச்செயலாளர்

வரவேற்பு — நிதியளிப்புக் கூட்டம்

3—7—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, கோவை சிதம்பரம் பூங்காவில் மாநில மாநாட்டு நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா.-நெடுஞ்செழியன், தோழர் ஈ.-வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று காலை 7 மணிக்குக் கோவை இரயில் நிலையத்தில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பும், மாலை 4 மணிக்கு தெப்பக்குளம் வீதியிலிருந்து மாபெரும் ஊர்வலமும் நடைபெறும்.

துருக்கி—ஈராக் இராணுவ ஒப்பந்தம்

பாகிஸ்தான் சேர முடிவு

கராச்சி, ஜூலை 1—

கடந்த பிப்ரவரித் திங்களில் கையெழுத்திடப்பட்ட துருக்கி—ஈராக் இராணுவ ஒப்பந்தத்தில், பாகிஸ்தானும் சேர முடிவு செய்திருப்பதாக, பாக். பிரதமர் முகம்மது அலி அறிவித்திருக்கிறார்.

ஆப்கன் தகராறு:

பாகிஸ்தான் கொடியை ஆப்கன் அவமதித்ததற்குச் சரியான மரியாதை செய்யாவிட்டால், ஆப்கன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை:

காஷ்மீர் பிரச்சினைக்கு, அடுத்த முறை தாம் இந்தியப் பிரதமரைச் சந்தித்து உரையாடுவது தோல்வியுற்றால், வேறு முறையில் பரிகாரம் தேட முயற்சிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அணுசக்தி:

பாகிஸ்தானில் விரைவில் ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு ஆராய்ச்சி நிலையம் வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிவில் வழக்குகள் விசாரணை

நகர நீதிமன்றத்தின் அதிகாரம் விரிவாகிறது

சென்னை, ஜூலை 1—

சென்னை நகர எல்லைக்குள் தொடர்பப்பட்டதும், 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு அதிகமில்லாததுமான எல்லாவித சிவில் வழக்குகளையும் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்கு சென்னை நகர 'சிவில்' நீதிமன்றத்திற்கு இம்மாதம் முதல் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று இன்று வெளிவந்த சர்க்கார் குறிப்பு கூறுகிறது.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

3—7—55 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி.மு.கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில், தோழர் ஏ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். அதுபோது, மாவட்டச் செயலாளர் பாராட்டு நிகழ்ச்சி, துணைச் செயலாளர் ராஜினாமா கடிதம், கழக வரவு-செலவு, மற்றும் சில பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

மாயூரம் நகர தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

3—7—55 இரவு 7 மணிக்கு, மாயூரம் நகர தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம், ஆசிரியர் வேலயுத மனறத்தில் நடைபெறும். அதுபோது, அண்ணா கூட்ட வரவு-செலவு, கழக ஆக்க வேலைகள் ஆகியவை குறித்து முடிவு செய்யப்படும்

அழகிரி மன்ற துவக்க விழா

3-7-55 மாலை 6½-க்கு, சென்னை கோமளீஸ்வரன்பேட்டை, சொய்யாத் தோப்புத் திடலில் (சித்ரா டாக்கீஸ் அருகில்), கோமளீஸ்வரன்பேட்டை (31-வது வட்டம்) அழகிரி மன்றத் துவக்க விழா தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், முகவை ஆர் எஸ். பாண்டியன், இளம்பரிதி ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

3—7—55 காலை 10 மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் வீரமணி தலைமையில், 'தேவை?' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

அழகிரி நூல் நிலைய திறப்பு விழா

3—7—55 காலை 9 மணிக்கு, சென்னை (கோடம்பாக்கம்) 35-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில், எண் 63-பி, ஆற்காட்டுச் சாலை, கழகக் கட்டிடத்தில், அழகிரி நூல் நிலையத் திறப்பு விழா, தோழர் ஏ. துரை தலைமையில் நடைபெறும். தோழர் இளம்பரிதி அவர்களால் நூல் நிலையம் திறந்து வைக்கப்படும். மற்றும் தோழர்கள் பலர் பேசுவர்.

குறள் வகுப்பு

3—7—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், திரு. தி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.